# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 17 வியாழக்கிழமை (01-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 32


# தைப்பொங்கலுடன் வன்னி நடவடிக்கை?

## இறுதிக்கட்டத் தாக்குதலுக்கு மேலும் 10 ஆயிரம் துருப்புகள்

வவுனியா, ஜனவரி 1

வன்னியில் மேற்கொள்ளப்படும் "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கையின் இறுதிக்கட்டத் தாக்குதலை தைப்பொங்கலுக்கு அடுத்த தினங்களில் ஆரம்பித்து இருபது தினங்களில் கிளிநொச்சி வரையான பாதையைக் கைப்பற்றுவது என ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் முடிவு செய்துள்ளன. இதற்காக மேலும் பத்தாயிரம் துருப்புகள் வன்னி யுத்த முனையில் குவிக்கப்பட்டு வருகின்றன.

'புலிகளின் குரல்' வானொலி இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் 3 ஆம் கட்ட நடவடிக்கையை தைப்பொங்கலுக்கு அடுத்த தினங்களில் ஆரம்பித்து 20 தினங்களில் கிளிநொச்சியைக் கைப்பற்றுவது என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தலைமையில் நடந்த முப்படைத் தளபதிகளின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இந்த நடவடிக்கையில் தற்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை நடத்த 4 கம்பனிகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 1

கொழும்பு—பலாலி பயணிகள் விமான சேவையை நடத்துவதற்கு நான்கு தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இந்த நான்கு நிறுவனங்களில் ஒரு நிறுவனம் எதிர்வரும் 9 ஆம் திகதி தனது சேவையை ஆரம்பிக்க ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் —

பல நிறுவனங்கள் விமான சேவை நடத்த முன்வந்துள்ளதால் விமான சேவைக்கு அறவிடப்படும் கட்டணம் குறைய வாய்ப்பு உள்ளதாகவும் — தெரியவந்தது.

தற்சமயம் 'லயன் எயர்' நிறுவனம் மட்டுமே இந்த விமான சேவையை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## நூறு பஸ்கள் யாழ்ப்பாணம் வரும்!

யாழ்ப்பாணம், ஜன. 1

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி யாழ். மாவட்டத்துக்கு 100 பஸ்கள் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் இவற்றில் ஒரு தொகுதி பஸ்கள் காங்கேசன்துறை முகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

அடுத்து வரும் நாள்களில் 55 பஸ்கள் எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்தது.

மத்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கும் டிப்போக்கள் தலா ஒவ்வொரு பஸ்களை யாழ்ப்பாணத்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரத் தளபதி புதுவருட வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜன. 1

பிறக்கும் புத்தாண்டில் யாழ். மக்களுக்கு அமைதியும் சுபீட்சமும் கிடைப்பதாக!

—யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மென்டிஸ் புதுவருடப் பிறப்பை ஒட்டி பொது மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். (உ)

## முச்சந்தி முரளி



பஸ், பிளேன், கப்பல், கல்வி எண்டு வருஷப்பிறப் போடை வலு சந்தோஷமான செய்திகள் பாருங்கோ...!


இன்றைய உதயனுடன்

வர்ண வருட வழிகாட்டி

இணைப்பு இலவசம்

முகவரிடம் கேட்டு வாங்குங்கள்!


### புத்தாண்டில்

## யாழ். கல்விக்கு ஐந்து கோடி ரூபா!

கொழும்பு, ஜன. 1

யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்கு இந்த ஆண்டில் ஐந்து கோடி ரூபா செலவிடப்படும்.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்திருக்கின்றார்.

கடந்த திங்களன்று ஜனாதிபதியைச் சந்தித்த ஈ.பி.டி.பி. தூதுக்குழுவினர் யாழ். கல்வி நிலை குறித்தும் ஜனாதிபதியிடம் பிரஸ்தாபித்தனர்.

"1997 ஆம் ஆண்டில் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்கு ஒன்பது கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் 60 லட்சம் ரூபாவே யாழ் மாவட்டத்தில் செலவிடப்பட்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் அனுபவிக்கும் துயர் நீங்குவதாக!

### யாழ். ஆயர் புதுவருடச் செய்தி

யாழ்ப்பாணம், ஜன. 1

நமது மக்கள் அனுபவிக்கும் துயர், மலரும் புத்தாண்டில் நீங்கி, எங்கும் அமைதி ஏற்படுவதாகுக!

– இவ்வாறு யாழ். ஆயர் பேரருள் திரு தோமஸ் சௌந்தரநாயகம் தாம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்று ஒரு புதிய ஆண்டை நாம் ஆரம்பிக்கிறோம். இத் தருணத்தில் எமது உள்ளங்களில் பேருவகையும் பல எதிர்பார்ப்புக்களும் நிறைந்திருக்கின்றன.

சென்ற வருடத்தைப் பல

(9 ஆம் பக்கம் பார்க்க)




### விமானங்களை அழிக்கும்

## புலிகளின் ஏவுகணை திருகோணமலையில்?

தோளில் இருந்து ஏவும் — விமான எதிர்ப்பு — ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் திருகோணமலைக்குக் கொண்டு வந்திருப்பதாக பொலீஸ் உளவுத் தகவல்கள் பாதுகாப்பு அமைச்சை எச்சரித்திருக்கின்றன.

இதனையடுத்து மட்டக்களப்பு, திருகோணமலைக்கான படை விமானப்போக்குவரத்தை பாதுகாப்பு உயர் பீடம் மட்டுப்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

1995 ஏப்பிரலுக்கு பின்னர் படையினரின் பல விமானங்கள், ஹெலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளின் தாக்குதலுக்கு இலக்காகி

(9 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் பவுஸர்களை இலக்கு வைத்துச் சூடு!

### மட்டு. சுங்கங்கேணியில்

மட்டக்களப்பு, ஜன. 1

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் சுங்கங்கேணி பகுதியில் விடுதலைப் புலிகளின் தடைமுகாமில் நிறுத்தாமல் சென்ற இரு பெற்றோல் பவுஸர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 9 30 மணி

(9 ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசன் - திருமலை இடையே

## மூன்று தடவைகள் கப்பல் சேவை நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜன. 1

காங்கேசன் துறைக்கும், திருகோணமலைக்கும் இடையில் இன்று முதல் மூன்று தடவைகள் பயணிகள் கப்பல் சேவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன் துறையில் பொருள் இறக்கி முடித்துள்ள

(9 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்திலும் புலிகள் ஊடுருவல்?

கொழும்பு, ஜன. 1

மலையகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவல் அதிகரித்துள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்படுவதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மலையகத்தில் அடுத்தடுத்து 500 மீற்றர் இடைவெளியில் இருந்த இரு மின் மாற்றிகள்

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி சம்பவங்களில் புலிகள் 12 பேர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 1
கடந்த 11ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வடமராட்சியில் மட்டும் தமது தரப்பில் 12 பேர் மரணமடைந்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

கடந்த 16ஆம்திகதி வதிரிப் பகுதியில் இராணுவத்தினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது 4 போராளிகள் உயிரிழந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு;-

லெப். கேணல் அர்ச்சுனா (இரத்தினம் வசந்தகுமார்— யாழ்ப்பாணம்), மேஜர் தேவமுதன் (ஜோதிகுருஸ் பிரபாகரன்— யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் அருணன் (அருந்ததி ஜெயகாந்தன் — யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்டினன்ட் மகேந்திரன் (பாலசுப்பிரமணியம் சந்திரகுமார். — யாழ்ப்பாணம்.) ஆகிய போராளிகளும்—

கடந்த 18 ஆம் திகதி கரவெட்டி கோவில் சந்தைப் பகுதியில்மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட நேரடி மோதலில் மேஜர் எழிலரசன் அல்லது மதனன் (சிவப்பிரகாசம் மேமிதன்— முள்ளியவளை), கப்டன் இளவரசன் (இரத்தினவடிவேல் பாலசேகர்— யாழ்ப்பாணம்),2ஆம் லெப்டினன்ட் கருவேலன் (கந்தையா உதயகுமார்— யாழ்ப்பாணம்), 2 ஆம் லெப்டினன்ட் பானுகோபன் (அன்னராசா ஆதவன்— யாழ்ப்பாணம்.) லெப்டினன்ட் வாணன் (செல்வராஜா மதிவண்ணன் — யாழ்ப்பாணம்). ஆகிய 5 போராளிகளும் —

கடந்த 19 ஆம் திகதி கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்றமோதல் ஒன்றில் லெப்டினன்ட் கந்தசாமி அல்லது சக்தி(இராஜேந்திரம் ராசன்- யாழ்ப்பாணம்)என்ற போராளியும்—

கடந்த 11 ஆம் திகதி அல்வாய்ப் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் கப்டன்மாறன் (மாணிக்கம் இராமகிருஷ்ணன், யாழ்ப்பாணம்.) லெப்டினன்ட். கர்ணன் (விஸ்வலிங்கம் ஸ்ரீகரன்— யாழ்ப்பாணம்.) ஆகியஇருபோராளிகளும் மரணமானதாக புலிகளின் குரல் அறிவித்தது.
(ஐ-164,9)

## ஆலயத்துக்கு ஜெனரேற்றர்

யாழ்ப்பாணம், ஜன. 1
யாழ் பிரதேச செயலகத்தின் 97 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோயிலுக்கு 85 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜெனரேற்றர் வழங்கப்பட்டுள்ளது. [ஐ-8]


Wish you a Happy New Year

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

கோபிகா
ஆடை அகம்
இல. 4, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
(சி/2524)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும், வட்டுக்கோட்டை
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான
அமரர் கலாநிதி ஆ. தியாகராசா
அவர்களின் அருமைத் தர்மபத்தினியார்
திருமதி மகேஸ்வரி தியாகராசா
அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம். அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா/கலாநிதி ஆ. தியாகராசா
ம. ம. வித்தியாலயம்.
காரைநகர். (52293)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் குருசிங்கம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)
(ஊர்காவற்றுறை)

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குருசிங்கம் 30-12-1997 அன்று கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கோணேஸ்வரியின் அருமைக் கணவரும், ரேவதி, சுவேந்திரன், வாசுகி, வானதி, சேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்தன், குமார், அருந்ததி ஆகியோரின் மாமனாரும் றேகன், நவீன், ஆதித்தன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. விஜயரட்ணம்
(சகோதரன்)
கல்வியங்காடு.
(52280)

# மேலும் 21 பயிலுநர் டாக்டர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு வருவார்கள்

## 11 பேருக்கு தெற்குக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 1
யாழ். வைத்தியசாலைக்கு நியமனம் பெற்றுள்ள 21 பயிலுநர் வைத்தியர்கள் இம் மாத நடுப்பகுதியில் தமது பதவிகளை ஏற்பார்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பயிலுநர் வைத்தியர்களாக நியமனம் பெற்ற 34 பேரில் 13 பேர் கடந்த வாரம் பதவி ஏற்றுள்ளார்கள்.

அதேநேரம் — கடந்த ஆறு மாத காலம் யாழ். வைத்திய சாலைகளில் பணியாற்றி வரும் வைத்தியர்களில் 11 பேருக்கு நேற்றுத் தெற்குக்கு இடமாற்ற உத்தரவு வந்துள்ளது.
(உ-3-மீ)

## காலிமுகத்திடலில் ஒன்றுகூட கட்டுப்பாடு

புதுவருடம் பிறக்கும் வேளையில் பொதுமக்கள் காலிமுகத்திடற் பகுதியில் கூடுவதைத் தவிர்க்குமாறு போக்குவரத்துப் பொலிசார் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் காரணமாகவே பொதுமக்களுக்கு இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.
(ஐ-10)

## புதிய கட்டடம்

சாவகச்சேரி பிரதேசசபை தலைமைச் செயலகமும் நூல் நிலையக்கட்டடமும் பிரதேச செயலக கச்சாய் உப அலுவலக வளவில் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கட்டடங்களின் ஆரம்பகட்ட வேலைகளுக்கென அடுத்த வருட (1998) உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவிசேட ஆணையாளர் பு. சுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

பிரதேச சபை தலைமைச் செயலகம் தற்போதுமீசாலை கமநல சேவைகள் நிலையத்தில் தற்காலிகமாக இயங்குவது குறிப்பிடத்தக்கது.
(ஐ-117)

## மாதாந்த உதவிப்பணம்

கொழும்புத்துறை, ஜன. 1
யாழ். பிரதேசச் செயலாளர் பிரிவைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான 1997 டிசம்பர் மாத கொடுப்பனவு சகல தபாலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உதவிப்பணம் பெறுவோர் உடனடியாக தபாலகங்களுக்குச் சென்று தத்தமது உதவிப் பணத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேசச் செயலாளர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.
(ஐ-30)

## விதவைகளுக்கு கடன் உதவி

சண்டிலிப்பாய், ஜன. 1
வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தாதரக உதவித்திட்டத்தின் கீழ் 40 இளம் விதவைப் பெண்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் தொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.
(ஐ-135)


லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
இன்று
30 அடி அகலத் திரையில்
விஜய், சங்கீதா
நடித்த
பூவே உனக்காக
குடும்பச் சித்திரம்
தினம் 10-30, 2-30
(52238)


## பொலிஸ் அதிகாரிகள் குழு மட்டக்களப்பு வந்தது

காலி குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து மட்டக்களப்பில் நேற்று முன்தினம் விசாரணைகள் ஆரம்பமாகின.

இதற்காக விசேட பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று மட்டக்களப்பு வந்து சேர்ந்தது.

சம்பவம் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சாரதி லைசென்ஸ் மட்டக்களப்பு கல்லடி வாசியான செல்வராசா செல்லத்துரை என்பவருடையது எனத் தெரியவந்துள்ளது.

அதேநேரம் மேற்படி லொறி கடந்த சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அம்பாறை பொலீஸ் சோதனை நிலையம் ஊடாகச் சென்றது பதிவு செய்யப்பட்டுள்ளது.
(இ-21-7)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, ஜன. 1
சாவகச்சேரி கச்சாய் வீதி நாவலடிப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பகல் சதுர்த்திப் பூஜையும் முருக மூர்த்தி கோயில் பஜனைக்குழுவினரின் பிரார்த்தனைப் பாடல்களும், சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி ஆசிரியர் சிறிபாஸ்கரனின் சமய சொற்பொழிவும் இடம்பெறும்.
(ஐ 117)

★ ★ ★

ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் நாளை 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு சதுர்த்தி திருவிழா விசேட அபிஷேகம்,பூசை,ஆராதனையுடன் நடைபெறும். தொடர்ந்து விநாயகப் பெருமான் மூக்ஷிக வாகனத்தில் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். மாலையில் கஜமுகசூரசங்காரமும் இடம்பெறும்.
(ஐ-30)

★ ★ ★

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி உற்சவம் நேற்று 31 ஆம் திகதி புதன் கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி இரதோற்சவமும், இரவு ஏகாதசி புராணபடனமும், பஜனையும், 9 ஆம் திகதி ''சமுத்திர'' தீர்த்தோற்சவமும் நடைபெறும்.
(ஐ-30)

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் அதிகாலை உதயத்தின் முன் திருவெம்பாவை பூசை நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பாடல்கள் பூசை, வழிபாட்டை அடுத்து தினமும் அதிகாலையில் பாடப்படும்.

சேக்கிழார் அருளிச்செய்த பெரிய புராணபடனம், திருவாதவூரடிகள் புராணம் வாசித்துப் பயன் சொல்லும் நிகழ்வும் சில ஆலயங்களில் இடம்பெறும்.
(ஐ-30)

புன்னாலைக்கட்டுவன்ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கஜமுகசூரசங்காரம் நடைபெறும்.
(ஐ)

★ ★ ★

நீராவியடி தோப்பு மாணிக்கப் பிள்ளையார் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு இலட்சார்ச்சனை பூர்த்தியும் மஹாகணபதி ஹோமமும் நடைபெறும். மாலை 3-30 மணிக்கு கஜமுக சூரசங்காரமும் இடம்பெறும்.
(ஐ)

★ ★ ★

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் நாளை வெள்ளி காலை 6 மணிக்கு மாதாந்த சதுர்த்திப் பூசையைத் தொடர்ந்து கஜமுகசூர சங்காரம் காலை 8 மணி முதல் நடைபெறும்.

ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்த பிள்ளையார் கதைப் படிப்பு நாளை மறுதினம் சனிக்கிழமை பூர்த்தியடையும்.
(ஐ)

★ ★ ★

ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகா சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை திருவாசகம் முற்றும் ஓதுதல் நிகழ்ச்சி பண்டிதர் மு.கந்தையா தலைமையில் நடைபெறும்.
(ஐ)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம் அதிபர் சுவாமி சித்ரூபானந்தா ''கற்பகதரு'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந் நிகழ்வுக்கான அறிமுகவுரையை காங்கேசன்துறை தபாலதிபர் சு. திருப்பரங்கிரிநாதன் நிகழ்த்துவார்.
(ஐ-30-173)

★ ★ ★

காரைநகர் மணற்காடு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் நாளை கஜமுகாசூரன் சம்ஹார உற்சவம் நடைபெறும்.
(உ-135)


மீண்டும் கொக்குவிலில்!
எடிசன் அக்கடமி
(கொக்குவில் இந்து - குளப்பிட்டிச் சந்திக்கு இடையில்)
K. K. S. வீதி, - கொக்குவில்
ஆண்டு 6 முதல் O/L வரை
ஆரம்பம்: 03 - 01 - 98
கணிதம்: திரு. B. P. பாஸ்கரன்
(52278)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள்
அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

இதோ!
TASTY இன் தயாரிப்புக்களான
TASTY நெல்லிரசம் TASTY கோடியல்
TASTY ஜாம் TASTY ஊறுகாய்
TASTY சோஸ்
எங்கும் கிடைக்கும்
ரேஸ்ரி — சுவையின் மகாராஜன் திருகு மூடி ஜாம் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

**ரேஸ்ட்லைன் இண்டஸ்ரீஸ்**
[தனி] லிமிட்.
ஆடியபாதம் வீதி (கேணியடிவைரவர் கோயில் அருகில்)
திருநெல்வேலி.
(52244)


## பெருமளவு கோடா மீட்பு

யாழ்ப்பாணம் ஜன. 1

சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சுவதற்காக வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 920 லீற்றர் கோடாவை யாழ்ப்பாணம் 4ஆம்குறுக்குத்தெருப் பகுதியிலிருந்து யாழ். பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

கோடாவை வைத்திருந்த தாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நபர் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவ் வழக்கு பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபரை 500 ரூபா காசுப் பிணையில் விடுதலை செய்யுமாறு அவர் உத்தரவிட்டார்.

(ஐ-7)


**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்**
**புத்தாண்டுப்பரிசு**

நுகர்வோருக்கான மாபெரும் விலைகுறைப்பு

| | | |
|---|---|---|
| பால் | 1 லீற்றர் | ரூபா 20/- |
| பால் | 1 போத்தல் | ரூபா 15/- |
| ஆடைநீக்கிய பால் | 1 லீற்றர் | ரூபா 12/- |
| ஆடைநீக்கிய பால் | 1 போத்தல் | ரூபா 09/- |
| தயிர் | 1 லீற்றர் | ரூபா 25/- |
| தயிர் | 200 மி.லீ. பக்கற் | ரூபா 05/- |
| காய்ச்சி சுவையூட்டிய 1 கப் பால் | | ரூபா 05/- |

போசாக்குணவு - பால் - பாவனையை அதிகரித்து தேகாரோக்கியம் பெறுவீர்.

பொது முகாமையாளர்
யா. மா. அ. கூ. சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
(சி/-2494)

**BOSCO INSTITUTE**
25, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
**A/L 2000**
**கலை, வர்த்தகம்**

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. விக்கி |
| கணக்கியல் | — திரு. சுதர்ஷன் |
| வர்த்தகம் | — திரு. குகன் |
| புள்ளிவிவரவியல் | — திரு. ரவிசங்கர் |
| அளவையியல் | — திரு. பத்மராஜ் |
| புவியியல் | — திரு. இக்னேசியஸ் |
| தமிழ் | — திரு. நகுலன் |
| இந்துநாகரிகம், இந்து சமயம் | — திரு. பத்மராஜா |
| கிறிஸ்தவம் | — திரு. ரதீஸ்வரன் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. ஜோன்சன் |

**ஆரம்பம்: 03 - 01 - 98**
காலை 8 மணி.
[52222]

**Institute of Informatics Studies**
Jaffna, Sri Lanka.

**HAPPY AND PROSPEROUS NEW YEAR**



**COMPUTER COURSES**
Next Sessions Starting on Saturday
3rd, January, 1998 at 10.00 a. m.

**Diploma in Software Technology**
(Special graduation course)
Entry Qualification: A/L - 3 Passes
Duration : Full Time : 12 Months
Part Time : 15 Months

**Certificate in MS Office**
(The best computer based office management software tool)
WINDOWS 95 MS WORD MS EXCEL MS ACCESS

**Programming Languages**
C/C++ PASCAL BASIC

**Application Packages**
dBASE III + LOTUS 123 SMART SUITE COREL DRAW
PAGEMAKER AUTO CAD

- *Excellent teaching.*
- *Payments can be made in instalments.*
- *5% Discount on full payment.*
- *Excellent collection of books.*
- *Practicals around the clock.*

*For further details contact:*



Institute of Informatics Studies,
• 68, Clock Tower Road, Jaffna.
• Navalar Madam, Karaveddy.
(சி/2501)


சிராவில் பிள்ளையார் திருவடி போற்றி

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கனகசபை தங்கம்மா**

அன்னை மடியில்: 01 — 01 — 1910
ஆண்டவன் அணைப்பில்: 11 — 01 — 1997
திதி; 01 — 01 — 1998

பாசத்தின் சிகரமாகவும், பண்பின் உறைவிடமாகவும்
விளங்கிய எங்கள் ஆருயிர்த் தெய்வமே!
ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டாயினும் ஆறிடுமோ
எம் இதயம்? தாயே! வற்றிடுமோ எம் கண்ணீர்?
உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,

தகவல்:-
திரு. திருமதி சுந்தரலிங்கம்,
புகையிரத நிலைய வீதி,
கொடிகாமம்.
(52260)


உள்ளூராட்சி மன்றங்களில்
பாரபட்சமற்ற திறமைமிக்க நிர்வாகத்துக்கு

**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி**
**(புளொட்)**

X

விளம்பர இல. (67654)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர்

# புதிய ஆண்டை வரவேற்போம் புனிதமாக வாழ முனைவோம்!

ஆறு. திருமுருகன்

இனிய மானிடமே! இன்று பிறக்கும் புதிய ஆண்டை இனிதே வரவேற்றுக் கொள். ஓடி முடிந்திருக்கும் சென்ற ஆண்டின் நினைவுகளை அகத்தில் இருத்தி நல்லனவற்றை நன்றியோடு நினைத்துக் கொள். தீயனவற்றை மறந்து விடு.

கடிகாரம் ஓடு முன் ஓடு என்றார்கள். காலத்தின் பெறுமதியை உணர்ந்த பெரியோர்கள் மிக வேகமாக நாள்கள் நகருகின்ற வாழ்வை நினைத்துக் கொள். எம்முன்னோர்கள், எமது அறிவுக் கண்களைத் திறந்தவர்கள் காட்டிய வழியில் எவ்வளவு தூரம் பயணஞ் செய்துள்ளோம் என்பதை வாழ்க்கைப் பயணத்தின் கடந்த வருட மணப்பதிவேட்டில் சரி பார்த்துக் கொள். உன் புற அழகைச் சரி செய்வதற்கு நித்தமும் கண்ணாடி முன் தோன்றி உன்னையே ரசித்துக்கொள்ளும் மனிதா! புதிய ஆண்டு பிறக்கும் இவ்வேளை உன் அகத்தை மனக் கண்ணாடியில் பார்த்துக் கொள்.

சென்ற காலத்தில் நீ செய்த நல்ல முயற்சிகளையும் அதனால் பெற்ற நல்ல அறுவடைகளையும் நினைந்து மகிழ்ந்து கொள் இதேவேளை நீ செய்த தவறுகளை நினைந்து வெட்கப்படு. அகத்தில் எழும் உன் தவறுகளைத் திருத்திக்கொள்வேன் என உனக்குள்ளேயே இன்று உறுதி கொள். வாழ்வை உசிதாகப்படுத்துவதற்கு அழுக்கில்லாத மனமாக அகத்தைச் சரிசெய்து கொள் எதிர்காலம் உனக்கு சாதகமாகவே அமையும்.

இயல்பாகவே நல்லவர்களாகப் பிறந்த மனிதஇனம் இன்று உலகம் முழுவதும் அவலப்படுகிறது. ஏன்? வாழ்வின் அடிப்படையை உணர்ந்து கொள்ளாமல் உலகம் அழிகிறது என உலகிலுள்ள அனைத்து ஆன்மீகப் பெரியவர்களும் பரிதாபப் படுகிறார்கள். இவர்கள் மனித இனத்தின் அமைதிக்காக ஆனந்த வாழ்வுக்காக அனுதினமும் பிரார்த்திக்கிறார்கள்.

பொதுவாக இன்றைய உலகில் வாழும் மனிதர்களுக்கு மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் செய்தி சொன்ன வண்ணமேயுள்ளன. மெய்ஞ்ஞானம் எவ்விடயத்திலும் மெதுவாகக் காலடி எடுத்து வைத்துக் கொள் என்கிறது. விஞ்ஞானம் கணப்பொழுதிலும் முன்னேறும் வழிகளை சொல்வதாகச் சொல்லப்படுகிறது. எனினும் உலகம் நவீன விஞ்ஞான உலகிலேயே சஞ்சரிப்பதாகக் கருதப்படுகிறது.

புதுயுகம் படைத்து விட்டோம் புதுமை செய்து விட்டோம் என மனிதர்கள் ஆர்ப்பரிக்கிறார்கள். மாற்று இதயமும் மனிதனுக்கு பொருத்தி விட்டோம் கிரகத்திலும் வாழ முயன்று கொண்டு இருக்கிறோம் எனச் செய்தி சொல்லும் விஞ்ஞான வளர்ச்சி மனித உலகை எவ்வளவு தூரம் ஆறுதல் படுத்தியுள்ளது என்று அகல நோக்கிப்பார்க்கின்ற போது மனித உலகம் வெட்கித் தலை குனிய வேண்டிய பரிதாபம் ஏற்படுகிறது.

உலகின் பல பாகங்களிலும் மனிதன் மனிதனால் அங்கங்களை இழந்து செயற்கையான அங்கங்களைப் பொருத்துகின்ற மனிதர்களின் எண்ணிக்கை அதி

(7 ஆம்பக்கம் பார்க்க)

## நல் ஒளியைத் தா!

பல்லாண்டுகளாகப் பட்டதுயரமெலாம்
பாரிற் பகற்கனவாய்ப் பறந்திடவே — ஞானமதில்
சீலமிகுவாழ்வு எமக்கு சிறப்பாயமைந்திடவே
காலமெலாம் உதயனே நல் ஒளிதா!

துன்பங்கள் நீங்கிச் சுகவாழ்வு நிலைத்திட
இன்பமாய் யாவரும் ஏற்ற மடைந்திட —
இப்புவியில்
உவகை பொலிய ஊரார் மகிழ்ந்திட
உதயனே நல் ஒளியைத்தா!

''நீர்வை தியாகமணி''

## புத்தாண்டே நீ வருக!

புத்தாண்டே நீ வருக!
புதுப் பொலிவுடனே வருக! நீயும்
''சத்தான'' சமாதானத் தோடே
சமர்கள் நீங்கியதென்ற
முத்தான நற் செய்தி கொண்டு
முழு இனமும் சமமென்றே கூறிப்
புத்தாண்டே! தொண்ணூற்றெட்டே
புறப்பட்டு நீ வருக!

புத்திரர், புருஷன், மனைவி தம்மை
புவியினில் நாமிழந்தோம்! எம்
சொத்துக்கள் இழந்தோம்! எங்கள்
சுற்றத்தையும் நாமிழந்தோம்!
எத்தனை இடர்கள் பட்டோம்!
எமக்கிந்த அவலம் வேண்டாம்! நல்ல
புத்தாண்டே நீயும் வாராய்!
புவியினில் இன்பந் தாராய்!

- குட்டியபுலம் - நா. முத்துக்குமார்




புதுவருட தினத்தை முன்னிட்டு
தங்கள்
வாழ்த்துக்களை வழங்கும்
ராகம்ஸ் பட்டுச் சோலையினர்

சகலவிதமான புடைவைத் தெரிவுகளுக்கும்
நீங்கள் நாடவேண்டியது:

ராகம்ஸ் பட்டுச் சோலை

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/2506)

சிற்றியின் மலரும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

சிற்றியின் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், மாணவர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது இதயங் கனிந்த மலரும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகஞ் செய்து நவீன கட்டிங் அமைப்புடன்
எடுப்புறத் தைப்பதில் யாழ். நகரில் முன்னணி வகிப்பவர்கள்:



CITY TAILORS
(Specialist in Wedding Coats & Suits)

இன்றைய தலைமுறையினருக்கு ஏற்ற அனைத்து ரக றெடிமேட் புடைவைத் தினுசுகளையும்
உடனுக்குடன் இறக்குமதி செய்பவர்களும்
★ தரம் ★ விலை குறைவு ★ நவீன டிசைன்களின் தெரிவுக்கு
என்றும் கைராசியான புடைவைக் கடல்

சிற்றி ரெக்ஸ் (ரவுசர் தினுசுகளின் சங்கமம்)



எம்மை வளர்த்தவர்கள் எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்களே. அதற்குக் கைம்மாறாக நாமும் அவர்களுக்குச் சேவை செய்யவேண்டும் அல்லவா?

ஆம். மலரும் புத்தாண்டில் இருந்து எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையளிக்க முன்வந்துள்ளோம்!

எம்மிடம் ரவுஸர் தினுசுகளை எடுத்துத் தைப்பவர்களுக்குத் தையல் கட்டணத்தில் கழிவு. விசேட வைபவம் ஒன்றுக்குப் புதிய ஜீன்ஸ் தைத்துப்போட வேண்டும்; ஆனால் கையில் போதியளவு காசு இல்லையே என்றகவலையா?

கவலையை விடுங்கள். உங்களுக்காகவே முன் நிற்கின்றான் சிற்றி. எம்மிடமே சிறுதொகைப் பணத்தைச் செலுத்தி குட்டிங்குகளைத் தெரிவு செய்து தைக்கவும். தைத்து முடிந்தபின் மிகுதி முழுப்பணத்தையும் செலுத்தித் தைத்த ஆடைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்கு அவசரமாக ஜீன்ஸ் தேவையா? அதற்கு உடனுதவும் சேவையையும் நடத்துகின்றோம்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய அன்றும், இன்றும், என்றும்

சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பு மலர்

## புத்துணர்வு தந்திடவா!

ஓ ...... புத்தாண்டே ...... !
தொண்ணூற்று எட்டே ...... !
வா ...... வா ...... !
அன்பெனும் பேரொளி அகிலத்தில் பரவி
எங்களின் கனவுகள் நனவெனத் திகழ
வேண்டும் அமைதியும் நீண்டு நிலவ
கமமும் தொழிலும் செழித்து ஓங்க
இணையிலா இன்பம் இதயத்தில் தவழ
எல்லோர் வாழ்வும் நிறைவுடன் விளங்க
ஓ ...............
உந்தன் வரவு நல்வரவு ஆகுக ........ !

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## வருக புத்தாண்டே!

வருக ! வருக !! புத்தாண்டே — நல்ல
வளங்கள் தருக புத்தாண்டே !
இனிமை மலரட்டும் புத்தாண்டே — தூய
இதயங்கள் மகிழட்டும் புத்தாண்டே

கவலைகள் தீர்ப்பாய் புத்தாண்டே — இறை
கருணையைத் தருவாய் புத்தாண்டே !
அவலங்கள் போக்குவாய் புத்தாண்டே — நல்ல
அமைதியை ஆக்குவாய் புத்தாண்டே !

சமநீதி வளரட்டும் புத்தாண்டே — உயர்
சமாதானம் பிறக்கட்டும் புத்தாண்டே !
அநீதி அழியட்டும் புத்தாண்டே
ஆனந்தம் பெருகட்டும் புத்தாண்டே !

சித்ரா செல்வநாதன்

## நம்பிக்கையுடன் வரவேற்போம்!

புதிய வருடம் ஒன்று இன்று மலர்கிறது.

இயற்கையின் நியதிப்படி இந்த உலகத்திலே கணத்திற்குக்கணம் பல்வேறு மாற்றங்களும், திருப்பு முனைகளும் ஏற்படுகின்றன. அப்போதெல்லாம் ஈழத்தமிழர்களும் தமது வாழ்வில் புது வழி பிறக்க வேண்டுமெனவே எண்ணி வந்தார்கள்; வருகிறார்கள்.

ஈழத் தமிழனுடைய வரலாற்றில் பல்வேறு ஆண்டுகள் பல்வேறு முக்கியத்துவங்கள் உடையனவாக விளங்கிய போதும் 1990 ஆம் ஆண்டிற்கு பின்னைய ஆண்டுகள் புலப்பெயர்ச்சி, பொருளாதாரத்தடை, பொருளாதார அழிவு, உயிர்ப்பலிகள், அகதி வாழ்க்கை என்ற வகையில் விசேட பதிவு உடையனவாக விளங்குகின்றன.

நாடளாவிய ரீதியில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைதாகிப் பின்னர் காணாமல் போதல், சித்திரவதை, வேலையில்லாப்பிரச்சினை, சுயகௌரவத்துடன் வாழ முடியாத நிலை, சுதந்திரமான நடமாட்டத்துக்கு இடைஞ்சல் இன்னும் பல்வேறு இடர்பாடுகளை 1990 தொடக்கம் தொடர்ச்சியான ஆண்டுகளில் எதிர் நோக்கினர்; எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பாக 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தமிழ் மக்களுடைய வரலாற்றில் மிகப் பெரும் இடப் பெயர்வு ஆண்டாகக் கொள்ளப்படுகிறது.

இடம் பெயர்ந்தவர்கள் பலரும் இலங்கையின் பல பாகங்களிலும் அகதிமுகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்ந்துள்ளவர்களும் தமது அன்றாடவாழ்வில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்று வாழும் எம் உடன் பிறப்புக்களும், வன்னியையே நிரந்தர வாழ்விடமாகக் கொண்ட தமிழ்ச் சகோதரர்களும் இன்று சொல்லொணாத் துயரத்தை எதிர்நோக்கியுள்ளனர். உணவுப்பற்றாக்குறை, பொருளாதாரத்தடை, தொடர்ச்சியான போர்முழக்கம், இயற்கை அன்னையின் சீற்றம், மருந்துத் தட்டுப்பாடு என்பன அவர்களை மேன் மேலும் துன்பத்திற்குள்ளாக்குகின்றன.

1997 ஆம் ஆண்டு வன்னிப் பகுதி வாழ் எம் சகோதரங்களுக்குப் பெரும் துன்பத்தையும், சோகக்கதைகளையும், இடர் மிகுந்த வாழ்வையும் தந்து விட்டு விடைபெற்றுச் செல்கின்றது. அடுத்து வரும் ஆண்டும் போர் முழக்கத்துடனேயே பிறக்கும் என்ற அறிகுறிகளும் அவர்களை வாட்டாமல் இல்லை.

இவ்வேளையிலேயே சந்திரிகா அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தரப் போவதாகக் கூறிக்கொண்டு தீர்வுப் பொதியையும் அதனோடு உள்ளூராட்சித் தேர்தலையும் இன்று முன்வைத்துள்ளது! ஈழத்தமிழர்களின் பல ஆண்டுகால போராட்டங்களின் பலாபலன்களை இத்தீர்வுப்பொதி தருகின்றதோ, இல்லையோ அவை நடைமுறைப் படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றதென்பதை 1997 ஆம் ஆண்டு பல தடவைகளில் உணர்த்தி நின்றது.

1997 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுடைய வரலாற்றில் எத்தகையதேனும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதா? என்பது ஆய்வுக்கும் சிந்தனைத் தெளிவிக்கும் உரியவிடயம்.

1996 ஆம், 1997 ஆம் ஆண்டுகளில் சுற்றிவளைப்புக்கள், வீதித் தடைகள், ஊரடங்குச் சட்டம், வேலையில்லாப் பிரச்சினை, கைதாகி பின்னர் காணாமற்போதல் முதலிய பல்வேறு பிரச்சினைகளையும் முகம்கொண்டவர்கள் யாழ்ப்பாணத்தமிழர்கள்.

இனிவரும் ஆண்டுகளாவது எமது மண்ணிலே நிரந்தர அமைதி, சமாதானம், சுபீட்சம், சுக வாழ்வு என்பன ஏற்படுவதற்கு வழி வகுக்க வேண்டுமென்பதே தமிழர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

- ஆனந்தன் -

மகாநதியின்

இனிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த புதுவருட நல் வாழ்த்துக்கள்
இன்றைய உலகில் நாளுக்கு நாள் அறிமுகமாகும் நாகரிகத்தை உடனுக்கு உடன் இங்கு அறிமுகப்படுத்துபவர்கள்.

மகாநதி புடைவையகம்

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

4, நவீன சந்தை சாவகச்சேரி.

(சி-2507)

எரிக்கணேஷின் வாடிக்கையாளர் பெருமக்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்



யாழ். குடாநாட்டில் மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதில் நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம் இவையனைத்தும் ஒருங்கமைந்தவர்கள்.

இறக்குமதி செய்யப்பட்ட அழகிய பிறேம்களும், போட்டோகிறே, போட்டோ பிறவுண் கண்ணாடிகளும் நீங்கள் தெரிவு செய்து அதே நாளில் பெற்றுக்கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எரிக்கணேஷ்

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்" ஏசாயா: 54-17

21 ஆவது வருட வாழ்த்துக்கள்
மேசியா நகை மாடம்

விசுவாசிகள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

மேசியா நகை மாடம்
111 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:
மேசியா நகை மாடம்
172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். சேவையில் நடைபெற்ற மேசியா நகை மாடத்தின் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைடன் வாடிக்கையாளர்களுக்கு
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

# லைடனின்

மலிவு விற்பனை வாடிக்கையாளர் நன்மைகருதி
தைப்பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது!
(சகல பொருள்களுக்கும் விசேட கழிவு உண்டு)

லைடன் புடைவை நிலையம்
32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2502)


## வீடு பார்க்கச் சென்றோர் திரும்பவில்லை

வவுனியா, ஜன. 01

கிளிநொச்சி— உருத்திரபுரம் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற 14 பேர் காணாமற் போய்விட்டனர்.

இவர்களில் 5 பேரை மட்டுமே தாம் கைதுசெய்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

(இ-164)


உ

அருள்மிகு
சொக்குவில் மஞ்சவனப்பதி
முருகன் ஆலய
# நிர்வாக சபை

மேற்படி ஆலயத்தில் 28–12–1997 (ஞாயிறு) இல் நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: பண்டிதர் திரு. த. கணேசபிள்ளை (B. A)
உபதலைவர்: திரு. செ. தம்பித்துரை
கௌரவ செயலாளர்: திரு. இ. இராசலிங்கம்
உபசெயலாளர்: திரு. கா. சுதாகரன்
கௌரவபொருளாளர்: திரு. இ. இராசசேகரம்
உபபொருளாளர்: திரு, சி. தேவசுந்தரலிங்கம்

நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. சு. வரதராஜேஸ்வரமுதலி
திரு. பூ. தர்மகுலசிங்கம்
திரு. செ. இராசேந்திரம்
திருமதி ப. செல்லத்துரை
திருமதி இ. புஸ்பலிங்கம்
திரு.ச. இ. இராசசேகரம்
திரு. தி. பிரதாபன்
திரு. சு. விக்கினேஸ்வரன்
திரு. இ. சண்முகநாதன்

கணக்காய்வாளர்: திரு. இ. இந்திரலிங்கம்
சமய ஆலோசகர்கள்: சைவப்புலவர் திரு. மு திருஞானசம்பந்தபிள்ளை
திரு. இ. சிவலிங்கம்

ஆலய சேவையில்
திரு. த. கணேசபிள்ளை
தலைவர்
திரு இ இராசலிங்கம்
கௌரவ செயலாளர்

(52232)



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

"மலரும் புத்தாண்டில் போரும் போரின் அழிவுகளும் விலகி அமைதியும் சமாதானமும் உருவாக இறைமகன் யேசு அருள்பாலிப்பாராக!

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது நிறுவனத்தின் சேவையை விரிவுபடுத்தியுள்ளோம் என்பதை புத்தாண்டுச் செய்தியாக எல்லோருக்கும் தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கிறாள் நியூ லலிதா

எமது முகவரிகள்:

# நியூ லலிதா ஜுவலர்ஸ்

170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்)
T. P. 24846

165, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
T. P. 332948

1604, GERRA STREET,
TORANTO, CANADA. (கனடா)
T. P. 416 4612610

(52135)



பெயர்மாற்றம்
# சத்தியா இரும்பகம்
தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.

மேற்படி பெயரில் இதுவரைகாலமும் இயங்கிவந்த எமது கடை அதே முகவரியில்

# சச்சியா இரும்பகம்

என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதையும் அறியத்தருகின்றேன்.

சச்சியா இரும்பகம்
எம்மிடம்:
★ சிமெந்து
★ கட்டடப் பொருள்கள்
★ ஆண்கள் பெண்கள் மிதிவண்டி
★ மிதிவண்டி உதிரிப்பாகம்
★ வாட்டர் பம் உதிரிப்பாகம்
★ பெயின்ற் வகைகள்

மற்றும் பொருள்கள் அனைத்தும் ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சச்சிதானந்தம்
உரிமையாளர்.

தெல்லிப்பளை வீதி,
மாவடி, வட்டுக்கோட்டை.

(51970)



புதுவருட வாழ்த்துக்கள் BASF
விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!
# லாவின்

★ மிளகாய் ★ கௌபி ★ போஞ்சி போன்ற பயிர்களில் காய்துளை புழுக்களைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட கிருமி நாசனி.
பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சி புழுக்களைத் தாக்கும் தன்மை குறைவானது.

புத்தம் புதிய
பின்கெம் லாவின் பி. எ. எஸ். எ(F)வ்
நிறுவனத்தினால்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உழவர் களஞ்சியம்
பலாலி வீதி, திருநெல்வேலி.
கமக்காரர் மாளிகை
பிரதான வீதி, சுன்னாகம்.

BASF – Finlay (Pvt.) Ltd.,
186, Vauxhall Street, Colombo - 2.
(பீடை கொல்லிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவியுங்கள்)

(சி/2366)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

சரசாலை மத்தி
'அம்பாள் அறநெறி மழலைகள் கல்விப் பூங்கா'
ஆசிரியை செல்வி ஜெயகௌரி இராசையா
அவர்களின் பெரிய தந்தையார்
சின்னத்தம்பி தம்பையா
(எழுது வினைஞர்)
அவர்களின் நினைவாக எனது கண்ணீர் மலர்களால் அஞ்சலி செலுத்துகிறேன்.
சிவஸ்ரீ ந. இராசேஸ்வரக்குருக்கள்
அபிவிருத்திச்சபைத் தலைவர்.

(52133)



அன்றாடப் பிரச்சினைக்கு உடனடித்தீர்வு உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு
இரண்டுக்குமே போராடுவதே எங்களின் நோக்கு எங்களுக்கே உங்களின் வாக்கு!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) X

(ஏ- 007)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டை வரவேற்போம்...

(நான்காம் பக்கத் தொடர்)
கவித்த வண்ணமேயுள்ளது. இரசுத்துக்கு காலடி எடுத்து வைக்கும் வேளை பல நாடுகளில் நிலத்தில் கால் எடுத்து வைக்க முடியாத கண்ணி வெடிகளின் கொடூரம். எனவே மனிதர்களே மனிதர்களின் பெருமூச்சு விட்டுத் அடிக்கும் வேதனையைத் தீர்க்க வேண்டும்

### இரக்கமுள்ள மனிதர் தேவை

இன்றைய உலகுக்கு இரக்கமுள்ள மனிதர்கள் தேவை. உலக அமைதியே மனிதர்களின் பேரவாவாக அமைய வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள உரிமைகளை ஒவ்வொரு மனிதனும் இயற்கையின் பெயரால் இறைவனின் பெயரால் வழங்கத் தலைப்படுகின்ற வாழ்வே அடுத்த நூற்றாண்டை அண்மிக்கும் நிலையில் பிறக்கும் புத்தாண்டுப் பிரார்த்தனையாகஎல்லோரும்பிரார்த்திக்க வேண்டும்.

முதுமை பெற்ற அனுபவ மனிதனுக்கு செய்தி சொல்வதைவிட வாழப்போகும் இளம் குழந்தைக்கு செய்தி சொல்வதே உயர்ந்த பணி என மகாகவி பாரதியார் நினைத்ததுமுண்டு! சொன்னதுமுண்டு. புத்தாண்டு பிறக்கும் இவ்வேளை குழந்தைகளே! மேலானவர்களாக வாழத் திட சங்கற்பம் கொள்ளுங்கள். பெரியவர்களை மதியுங்கள். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன். எனவே கல்வியைக் கண்ணாக மதியுங்கள் நீங்கள் பிறந்த மண்ணை, உங்களை வாழ்வித்தவர்களை இமைப் பொழுதும் மறவாதீர்கள். நீதியின் பக்கமாக வாழ்க்கைப் பயணத்தைத் தொடருங்கள்.

உங்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாக பாரதியார் சொன்ன நீதி, உயர்ந்த மதி, கல்வி, அன்பு நிறையவுடைய மேலோரைப் பின்பற்றுங்கள்.

மூத்தோரே வழிகாட்டுங்கள். உங்களைப் பின்பற்றுவதே பிள்ளைகளின் இயல்பு. புத்தாண்டு பிறக்கும் இவ்வேளை வழிகாட்டுதலுக்குரிய தகுதியில் வாழ்கின்றோமா? என்று சிந்தியுங்கள் உங்கள் இறைபக்தி, உங்கள் நேர்மை, உங்களின் இரக்கம், உதவும் மனப்பாங்கு உங்களின் நாட்டுப்பற்று இவையே உங்கள் பிள்ளைகளோடும் சேரும்.

எனவே புதியஆண்டை வரவேற்போம். புனிதமாக வாழக் கற்றுக் கொள்வோம்.

★

# நம்பிக்கையுடன்...

(ஐந்தாம் பக்கத் தொடர்)
கள் ஒவ்வொருவரதும் தலையாய வேண்டுதல்களாகும்.

1997 ஆம் ஆண்டு சமாதானத்தை வழங்காமலே விடைபெறுகின்ற இவ் வேளையில் 1998 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் எண்ணங்கள், விருப்பங்களைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அமையுமா?

நம்பிக்கையுடன் வரவேற்பதே மரபு.

(★)


## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

விஞ்ஞான பீடம்
1996/ 97 கல்வியாண்டு
புதிய
மாணவர்களுக்கான
அனுமதி

1996/ 97 கல்வியாண்டு புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் ஏற்கனவே பத்திரிகைகளில் விளம்பரம் செய்தபடி 02 02. 1998 இல் ஆரம்பமாக மாட்டாது.

இதற்குரிய நிகழ்வுகள் ஆங்கில கற்கை நெறி யாவும் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்படும்.

-பதிவாளர்,
(சி/2521)

அனைவருக்கும் எமது இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
YOGI HOME SCIENCE ACADEMY
மனையியல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன.

★ இலகுவழித் தையல் முறைகள் ★ கேக்ஐசிங்
★ மாச்சினி மணிகள் ★ மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள்
★ முகஒப்பனையும் நவீன புதிய தலை அலங்காரங்களும்
★ செயற்கை மலர்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
★ இயற்கை மலர் ஒழுங்குகளும் அலங்காரமும்
★ நவீன முறையில் துணியில் வர்ண அலங்கரிப்பு

சேர விரும்பும் மாணவியர் உடன் தொடர்பு கொள்ளவும்:

75, அம்மன் வீதி, (வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
நல்லூர், யாழ்ப்பாணம்.

(52276)

G. S. லிங்கநாதன் அன் கோ

நவநாகரிக திருமணப் புடைவைகள் விற்பனையில்
நறுமணம் வீசும்
G. S. லிங்கநாதன் அன் கோ
நிறுவனத்தின்

பூரிக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஜவுளி உலகின பெருங்கடலாய் நாளுக்கு நாள் மாறும் நாகரிக புடைவைகளை மக்களுக்கு அறிமுகஞ் செய்து ஏகோபித்த வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே கொண்டு நிலைத்துவிட்ட பெயர் பெற்ற

G. S. லிங்கநாதன் அன் கோ
ஸ்தாபனத்தார்
98 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும்,
நலம் பெற வளம் பெறவாழ்த்துகின்றார்கள்.

G. S. லிங்கநாதன் அன் கோ
13, 14, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
விளம்பர வடிவமைப்பு:
மணிக்குரல் V. S. சற்குணன்

(52166)



ராஜன் சைக்கிள் வேக்ஸ்
ஸ்தாபனத்தாரின்
புதுவருட வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

★ ஆண்கள் பெண்களுக்குரிய சைக்கிள்
★ சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ றேடியோ ★ மணிக்கூடு
★ ரீ. வி ★ டெக் ★ ஜெனரேற்றர்
★ எமது ஸ்தாபனத்தின் விற்பனைப் பொருள்கள்.



எமது நிபந்தனைக்கு இணங்க
தவணை முறையில் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் ரீ. வி பூஸ்ரர், அன்ரனா, பாட்டா, சிறுவர் சைக்கிள்,
அழகு சாதனப் பொருள்கள் யாவும் பெற்றுக் கொள்ளலாம்.
விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.



தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(52092)

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
யாவருக்கும் எமது இதயங் கனிந்த
புதுவருட வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

துர்க்கா மில்ஸ்

தரமான துர்க்கா சீயாக்காய்ப் பவுடரைப் பெற்று
பயன் பெறுங்கள்.

பொன்னாலை வீதி, மானிப்பாய்,
(தெல்லிப்பழை).

(சி-2522)

வாழ்த்து

உவகை உள வாழ்த்துக்கள்
லயன் T. சற்குணராஜா M. J. F.
லயன் S. S. செல்வரட்னம் M. J. F.

தமிழ்த் தரணியின் சேவை முன்னெடுப்புக்காக தாம் பெற்ற M.J.F சர்வதேச விருது சமூகத்தின் ஒளி விளக்காய்ப் பிரகாசிக்க இன்றைய இனிய காலைப் பொழுதில் தங்களை உள உவகையோடு வாழ்த்துகின்றோம்.

லியோ கழகம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(52277)

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்.
ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்:



கஜீபன் ஜுவல்லறி
தங்க வைர நகை வியாபாரம்
கே. கே. [illegible] வீதி, கோண்டாவில்.

(52173)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிரிமா லைலைன் பிறவுண் ஒருநாள் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவை யானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும்.
[சி/2510]

### தவறிவிட்டது

அன்புக்கரசி கந்தசாமி என்பவரது பவுண் கழுத்துச் சங்கிலி நவாலி வடக்கு, கற்கேணிக்கும், நவாலி தெற்கு தென்னிந்திய திருச்சபை ஆலயத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நவாலி திருச்சபை போதகரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [52239]

### தேவை

கொக்குவிலில் வசிக்கும் 2 பேர் உள்ள குடும்பத்துக்கு சமையல் செய்யக்கூடிய ஏறக்குறைய 50 வயதுள்ள பெண் தேவை. சம்பளம் நேரில் கதைக்கலாம். மே/பா 674, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [52247]

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்தினரும், எல்லா உத்தியோகத்திலும் மணமகன், மணமகள் உண்டு. டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், பட்டதாரி ஆசிரியர் உண்டு. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்; துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [52265]

59 ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரமுடையசெவ்வாய்க் குற்றமற்ற சொந்த கொம்பனி முதலாளிக்கு அழகிய மணமகள் தேவை. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
[52266]

### வகுப்பு

புல்லாங்குழல், ஓர்கன், கிற்றார் ஆகியவகுப்புக்கள்மாலை 2.00 மணியிலிருந்து நடைபெறுகின்றன. தொடர்பு: சரவீணா, இல:23, உறோசெற் வீதி, சுண்டுக்குளி (கல்வி வலயம் ஒன்றின் காரியாலயத்திற்கு அருகில்) (51770)

### திருவாசக முற்றோதல்

கொழும்புத்துறை, ஜன. 1 யாழ். சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். நீராவியடிநாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெறும். (ஐ-30)

### உடன் விற்பனைக்கு

பிறிமா புறோயிலர் ஒரு நாள் குஞ்சுகளும் ஒரு மாதம் வளர்ச்சியடைந்த பிறவுண் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், பல இன அழகிய கலர் வளர்ப்பு மீன்களும் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா பதி, மானிப்பாய். [52259]

### மகாதேவா ஜோதிடம்

''வியாழமாற்றம்'' புத்தகம் எங்கும் கிடைக்கும். சோதிடரை - கடை - 626, பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தசாமி கோயில் முன்பாக) காலை 10 மணி தொடங்கி பிற்பகல் 2 மணி வரையும். ஏனைய நேரங்களில் வீடு - 140, செல்லர் வீதி, (கல்வியங்காடு) இடத்திலும் தினசரி சந்திக்கலாம்.
[சி/2429]

### தளபாடத் தேவை

மிக நல்ல நிலையிலுள்ள பெரிய நவீன அல்லது பழைய செற்றி செற் விற்பனைக்கிருப்பின் தொடர்பு கொள்க; 383/1. நாவலர் லேன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [52274]

### தட்டெழுத்துறோணியோ

ஆய்வுக் கட்டுரைகள் விரெளசிங் உறுதிகள் மற்றும் தட்டச்சு றோணியோ வேலைகள் சிறந்த முறையில் குறைந்த செலவில் செய்து தரப்படும். தொடர்பு; .வே பூபாலசிங்கம், ஐயாகடையடி, மீசாலை.
[52153]

### மணமகள் தேவை

விஸ்வகுலம் இஞ்சினியராக உள்நாட்டில் தொழில் புரியும் 31 வயது ரேவதி நட்சத்திர மணமகனுக்கும் லண்டனில் தொழில் புரியும் 38 வயது ரேவதி நட்சத்திரம் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை பொன்சரில் கூப்பிடுவார் தொடர்பு, Ram Livf Long Gulde 39, K. K. S வீதி, கொக்குவில்.
[52271]

### இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக்கோழி நியாயவிலையில் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். 5ஏ/2 சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந் தாழ்வு, யாழ்ப்பாணம்.
[52269]


அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்!

பிலிம்றோல் பற்றரி, குளிர்பான வகைகளுக்கு

**CHENA CENTRE**

274, STANLEY ROAD,
JAFFNA

[52189]



## நத்தார், புத்தாண்டு
## வாழ்த்துக்கள்

யாழ். நகரின் தலை சிறந்த உற்பத்தித் தரத்தின் சிகரம்
**கலாஸ் சோடாக் கம்பனி**
என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்,

எமது உற்பத்திகளில் சில:

- ★ கனா கோலா
- ★ ஒரேஞ்
- ★ மோனிடோ
- ★ லெமனெட்
- ★ சலம் சோடா
- ★ இஞ்சிச் சோடா
- ★ பிளேன் சோடா
- ★ ஒரேஞ் பார்லி
- ★ பைனப்பிள் சோடா
- ★ கிறீம் சோடா

[சுகாதார முறைப்படி சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர், வாயுவுடன் வெளிநாட்டு மூலப் பொருள்களை கொண்டு தயாரிக்கப்பட்ட சோடா வகைகளுக்கும் நெல்லிப் பழரசத்திற்கும் நகரின் உற்பத்தித் தரத்தின் சிகரம் என்பதனை அறியத் தருகின்றோம் ]

**கலாஸ் சோடாக் கம்பனி**
**166/3, நாவலர் றோட்,**
**யாழ்ப்பாணம்.**

[52262]



**ராஜன்**
**வீடியோமூவிஸ்சென்ரர்**
**பருத்தித்துறை.**

**புகழ்பெற்ற வீடியோ படப்பிடிப்பாளர்கள்**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள விழாக்கள், பொது விசேட வைபவங்கள் அனைத்தையும் சிறந்த முறையில் நவீன மிக்சர் மற்றும் நவீன கமெராக்கள் கொண்டு வீடியோ படம் பிடிப்பதற்கும் மணப்பந்தல், சொக்கட்டான் பந்தல் அமைப்பதற்கும்

போட்டோபிரதி, லெமனற்றிங்

உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்**
**பழைய பஸ் நிலையம், பருத்தித்துறை.**

(52091)



மலரும் புத்தாண்டில் மக்கள் அனைவருக்கும் சமாதானம், சுபீட்சம், நல்வாழ்வு கிடைக்க வாழ்த்துவோர்:

**"ஒட்டோ சப்ளையர்ஸ்"**
266 A, ஸ்ரான்லி வீதி,
மூவில் மூவர்ஸ்'
(உதிரிப்பாக விற்பனையாளர்)
(52261) நல்லூர்



அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது இனிய
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

**துர்க்கா நகைப்பூங்கா**
இல. 71, கன்னாதிட்டிவீதி,
யாழ்ப்பாணம்.
(கன்னாதிட்டி மக்கள் வங்கி முன்பாக)
(52285)


## 2 ஆம் வருட நினைவஞ்சலி

### அருட்திரு. க. யோண்லொறற்

பிறப்பு: 10-10 1966
இறப்பு: 01-01-1996
திருநிலை: 23-02-1995

மரணித்துக் கொண்டிருந்தவர்களின் உயிர்ப்பிற்காய், நண்பா! நீ ஒரு நாள் மரணித்துப் போனாய். எனினும் இறக்காத உனது சுவாசத்தின் காற்று குருதி வெளிகளில் எமது இதயங்களுள் உயிர்ப்புடன் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

உன் நினைவில்
யாழ். மறைமாவட்ட அருட்சகோதரர்கள்
புனித பிரான்சிஸ் சவேரியார்
குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை.
(52281)

ஓம் விராட் விஸ்வப் ரமனே நம

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

(சபண்ணீகரண அழைப்பு)



அமரர்

### விஸ்வப்ரம்மஸ்ரீ சி.தா. கிருஷ்ணசாமிபத்தர்

தோற்றம்: 19-06-1920
மறைவு: 18-12-1997

அணைந்தும், அணையா ஜோதியாய் அன்பு, பாசம், பரிவுடன் குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் ஒளி விளக்காய்த் திகழ்ந்த - ஐயா! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணை நகர்க் காமாக்ஷி அன்னை பாதம்
வளமார்ந்த மலர் தூவித் துதிக்கும் அண்ணல்
வண்ணமிகு பொன்னணிகள் எழிலும் கொஞ்ச
வகை வகையாய் ஆபரணம் செதுக்கும் ஐயன்
எண்ணமெல்லாம் நாகபூஷணியாம் அன்னை
எழிலுக்கு எழிலூட்டும் அலங்காரத்தில்
கண்ணனைய பொற்கலைஞன் கிருஷ்ணசாமி
கண்ணுதலான் கழலடிகள் சேர்ந்தான் வாழி.
சாந்தி!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

671/1, கே.கே.எஸ். வீதி, பூநாறிமரத்தடி,
யாழ்ப்பாணம். [52233]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org